# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 168/ந/2017

நாள் : 13/06/2019

| | | |
|---|---|---|
| 10.08.2017 நாளிட்ட<br>தினகரன் நாளிதழ் செய்தி | – | முறையீட்டு மனுவாகப்<br>பதிவு செய்யப்பட்டது. |
| நகராட்சி ஆணையர்,<br>திருவள்ளூர் நகராட்சி,<br>திருவள்ளூர். | – | எதிர் மனுதாரர் |

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட ஈக்காட்டுப் பகுதி பேபி கால்வாயில், அந்நகராட்சியின் கழிவு நீர் விடுவதால், " கூவமாக மாறும் பேபி கால்வாய் " என்று தலைப்பிட்டு 10.08.2017 நாளன்று தினகரன் நாளிதழில் செய்தி வெளியாகியிருந்தது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மேற்குறிப்பிட்ட செய்தியினை 168/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து, நடவடிக்கையினை மேற்கொண்டது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் நாளிதழ் செய்தி ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட ஈக்காட்டுப் பகுதி பேபி கால்வாயில், அந்நகராட்சியின் கழிவு நீர் கலப்பதால், " கூவமாக மாறும் பேபி கால்வாய் " என்று தலைப்பிட்டு 10.08.2017 நாளன்று தினகரன் நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. பூண்டி ஏரியில் இருந்து புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு தண்ணீர் செல்லும் பேபி கால்வாயில் ஈக்காட்டுப் பகுதியில் திருவள்ளூர் நகராட்சியின் கழிவு நீர் விடப்படுவதால், குடிநீருடன் கழிவு நீரும் கலப்பதால் அத்தண்ணீரை அருந்தும் சென்னை நகர மக்களுக்கு பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்படுகிறது என்றும் , அக்கழிவு நீர் விடப்படுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தி குறித்து திருவள்ளூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட ஈக்காட்டுப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறதென்றும், மழைக்காலங்களில் மேற்குறிப்பிட்ட கால்வாய் வழியாக மழை நீர் வடிந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளதென்று நகராட்சி ஆணையர் தனது 29.05.2019

நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். பேபி கால்வாய் அமைந்துள்ள ஈக்காட்டுப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு, கழிவு நீர் மேற்குறிப்பிட்ட கால்வாயில் செல்வது தடுக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் தொடர்ந்து இந்நிலையை தொடர்ந்து கண்காணிக்கும்படி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019–** ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், **13–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

20/6/2019

செயலாளர்

20/6/19

20/6/19

பெறுநர்

**நகராட்சி ஆணையர்,**
**திருவள்ளூர் நகராட்சி,**
**திருவள்ளூர்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**